[1975 நவம்பர் 11

பாலேசுவரன் ஆலயம்

*302 வின—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், புது கும்முடிப்பூண்டி பாலேசுவரன் ஆலயத்திற்குரிய மானிய நிலத்தில் பல ஆண்டு காலம் விடு கட்டி இருக்கும் ஏழை மக்களுக்கு அக்குடி மனைகளைப் பட்டா செய்தளிக்கும் திட்டம் காலதாமதம் ஆவதேன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) அருள்திரு பாலேசுவரன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருப்போர் தங்களுக்கு அந்த குடிமனைகளை பட்டா இலவசமாகச் செய்து கொடுக்க வேண்டி மனு கொடுத்துள்ளனர். இவர்கள், வாடகை செலுத்தவோ, வாடகை ஒப்பந்தம் எழுதித் தரவோ, மனையின் பரப்பளவு போன்ற விபரங்களை தரவோ மறுக்கின்றனர். இருப்பினும் வாடகை தருவது பற்றியோ அல்லது கிரயம் பெற்றுக்கொள்வது பற்றியோ ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டுமென்று அறங்காவலர் குழுத் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டப்படி திருக்கோயில் நிலங்களை அடமானம் வைப்பதற்கோ, மாற்றிக் கொள்வதற்கோ, விற்பதற்கோ அல்லது குத்தகைக்கு விடவோ அதற்கு மட்டும்தான் ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. ஆகவே அக் குடிமனைகளை வாங்க விரும்புவோர் ஆலய நிர்வாகிகளின் ஒப்புதல் பெற்று சட்டப் பிரிவு 34-ன் கீழ் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையருக்கு மனுச் செய்து கொள்ளலாம்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்தக் கோயில் நிலத்தில் குடியிருப்பவர்கள் பெரும்பாலும் விவசாயக் கூலிகளாகவும் தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு 'நாமினல் காஸ்ட்' என்று நிர்ணயித்து அவர்கள் குடியிருக்கும் பகுதியில் எப்படியும் நிலப்பட்டா செய்ய அறநிலையத் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அங்கே இருக்கின்ற மார்க்கெட் மதிப்பு என்று கொள்ளாமல் அரசின் மதிப்பீட்டுக்குத் தருவதற்கு அந்தக் கோயில் தயாராக இருக்கிறது. ஆனல் நிலத்தில் குடியிருப்பவர்கள் எந்தப் பரப்பளவில் குடியிருக்கிறார்கள் என்பதை அளந்து சொல்லக்கூட எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அறங்காவலரால் அந்தக் காரியத்தைச் செய்ய முடியவில்லை. தனியாக நிர்வாக அதிகாரியை நியமிக்க தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்களும் குடியிருப்பவர்களிடத்தில் சொல்லி எந்த அளவு பரப்பளவில் குடியிருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தந்தால் அரசாங்க மதிப்பீட்டுக்கு அந்த நிலத்தைக் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக நாம் தரலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அங்கேயுள்ளவர்களுக்கு மனை கொடுப்பது என்றால் மீதப்படும் தொகையை ரெவின்யூ இலாக்கா எச். ஆர். அண்ட் சி. இ.-க்குக் கொடுக்கட்டுமே. நாமினல் காஸ்ட் என்று எப்படி எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை.

(விடை இல்லை).

தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்ட அகதிகள்

*303 **வின—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டு முடிய இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா முதலான நாடுகளிலிருந்து வந்துள்ள எத்தனை அகதி குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியேற்றப்பட்டிருக்கின்றன ?

(இ) மேற்படி அகதிகள் மேம்பாட்டிற்கென குழு Committee) ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) தமிழ்நாட்டில் குடியேற்றப்பட்ட அகதிக் குடும்பங்களின் விபரம் :

இலங்கை அகதிக் குடும்பங்கள்—33,437

பர்மா அகதிக் குடும்பங்கள்—3,139